

அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (22.12.2025) சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில், ரூ.12 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட கட்டடங்கள், வளாகம் மற்றும் புதிய நுழைவு வாயில் ஆகியவற்றினை திறந்து வைத்தார். இவ்விழாவில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார். தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, பதிவாளர் மரு.சிவசங்கீதா மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





நேற்று (22.12.2025) பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் சென்னை, நந்தனம் ஆவின் அலுவலக கூட்டரங்கில் காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியங்களில் உள்ள விற்பனை மேலாளர்கள் மற்றும் தற்காலிக விற்பனை பிரதிநிதிகளுக்கான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ச.கவிதா, மாவட்ட பொது மேலாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## குருநானக் கல்லூரி அருகில் உள்ள வேளச்சேரி மயானபூமியில்

# ரூ. 6.85 கோடி மதிப்பீட்டில் நவீன மயானபூமி கட்டுமானப் பணி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, டிச.23-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (22.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு172, குருநானக் கல்லூரி அருகில் உள்ள வேளச்சேரி மயான பூமியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 6.85 கோடி மதிப்பீட்டில் நவீன மயானபூமி கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்த மயான பூமியானது 10,000 சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். இம்மயான பூமியில் இரண்டு தனித்தனி தகன மேடை அறைகள், முழுமையான தானியங்கி எல்.பி.ஜி. அடிப்படையிலான தகன அமைப்புகள், துக்கம் அனுசரிப்பவர்களுக்கான விசாலமான ஒன்றுக்கூடும் பகுதிகள், அர்ப்பணிக்கப்பட்ட சடங்கு அறை, திறந்தவெளி பகுதி, கோயில் வளாகம், ஈரமான ஸ்க்ரப்பர் அமைப்புடன்கூடியபுகைப்போக்கி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சுற்றுப்புற நிலப் பரப்பு, வாகனம் நிறுத்த வசதி, தீயணைப்பு அமைப்புகள் மற்றும் தீயணைப்பான்கள், தடையில்லா மின்சாரம், மழைநீர் வடிகால் அமைப்பு வசதி, அலுவலக அறைகள் மற்றும் கழிப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மண்டலக்குழுத் தலைவர் ஆர். துரைராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வார்டில் உள்ள 374 வது பாகம் மற்றும் 375 வது பாகம் ஆகிய பாகங்களில் என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி ஆலோசனைக் கூட்டத்தில் பாக முகவர்கள் து.வேலவன் (374) எ. மகேஷ் (375) ஆகியோர் தலைமையில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டல குழு தலைவருமான, என். சந்திரன், கலந்துகொண்டு வாக்கு சாவடி பூத் உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் 167வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 167 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி துர்கா தேவி நடராஜன், மாவட்ட நிர்வாகிகள் அபிஷே கிருஷ்ணா, பிரான்சிஸ், மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மீ.வே.கர்ணாகரன் ஏற்பாட்டில் – துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

# சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை! சே.கருணாஸ், சைதை சாதிக், கே.பி.சங்கர், ஜேஅருண் சிறப்புரை!

சென்னை டிச.23

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதல் வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (24.12.2025 புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் மொண்டியம்மன் நகர் மார்க்கெட் அருகில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மு.முகமது அலி, எஸ்.டி.சுந்தரமூர்த்தி, என்.ஜி.ஆறுமுகம், ஆர்.குமரன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

வழுதிகை நா.செல்வசேகரன், ஏ.காசிம் முகமது, கே.எம்.துரைவேல், ப.சீனிவாசன், கி.வீரம்மாள், செ. அரசு, இரா.விஜயன், பா. சேகர், பொன் கோதண்டன், எஸ்.கே.மணி, வி.அரிஹரன், டி.எஸ்.ரகுபதி, பெ.ரங்கநாதன், எஸ்.ஆர்.எல்.எஸ்.தாமு, எம்.ராமு, ஏ.ராஜசேகர், எம். முத்தையா, எம்.ஜி.கார்த்திக், ஜெ.டில்லி, சி.ஜே.ராஜசேகர ராவ், எஸ்.நாகராஜ், எஸ். சதீஷ், எம்.விக்னேஷ், ஏ.பிஸ்மில்லா, எஸ்.குணசேகரன், கே.கருணா, எஸ்.முத்துக்குமார், எம்.முகமது அலி, எம். அந்தோணி, பா.லட்சுமணன், கே.அருள் முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவிற்குசென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையேற்று நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

மேலும் இவ்விழாவில் முக்குலத்தோர் புலிப்படை தலைவர் சே. கருணாஸ், தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஜெ.அருண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றார்.

இவ்விழாவில் வீ.கண்ணதாசன், வீ.கவி கணேசன், ஜி. சந்திர போஸ், ஆர். பத்மநாபன், பா.மதிவாணன், வி. இராமநாதன் குறுஞ்சி எஸ். கணேசன், மு.ராஜேந்திரன் டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெய் மதன், டி.ஏ.ராஜி, இரா.முருகேசன், பி.சாந்தி, எஸ்.நந்தகோபால், ஜி.துக்காராம், புழல் எம். நாராயணன், ஜி.தயாளன், சி. அற்புதராஜ், ஜி.ராஜேந்திரன், ஐ.ஜான், என்.முகிலன், நா. மணிகண்டன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், முன்னாள் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், சோழவரம் தெற்கு ஒன்றிய ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை சோழவரம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்பாக செய்துள்ளார்.

நிறைவாக எம்.ஜெகன், ஏ.கே.கௌதம், ஆர்.குமரன், என்.விஜய், ஆர்.சி. சிவசங்கரன், கே.கவியரசு, க. பிரபு, எஸ்.பார்த்திபன், கே. பாலாஜி எம்.எஸ்.மணிகண்டன், ஆர்.ரூபேஷ், எஸ்.முத்துக்குமார், ஆர்.தினேஷ் குமார், எஸ்.திவாஸ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா:

# 1 இலட்சம் பரிசுத் தொகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள்!

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச. 23-

தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும்விதமாக, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களின் ஏற்பாட்டில், நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் எழும்பூர் தொகுதியில் கேரம், கிரிக்கெட் மற்றும் கால்பந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகளில் பங்குபெற்ற 500 விளையாட்டு வீரர்களைக் கொண்ட 50 அணிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு; கால்பந்தாட்டப் போட்டியில் முதலிடம் வென்ற அணிக்கு ரூ.25,000/-, இரண்டாம் இடம் பிடித்த அணிக்கு ரூ.15,000/-; கிரிக்கெட் போட்டியில் முதலிடம் வென்ற அணிக்கு ரூ.25,000/-, இரண்டாம் இடம் பிடித்த அணிக்கு ரூ.15,000/-; கேரம் போட்டியில் முதலிடம் வென்ற அணிக்கு ரூ.10,000/-, இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடித்த அணிகளுக்கு தலா ரூ.5,000/- என வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்க பரிசுத் தொகை ரூ.1 இலட்சம் மற்றும் கேடயம், கோப்பைகளை எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், புளியந்தோப்பு, கே.பி. பார்க் குடியிருப்பு வளாக விளையாட்டுத் திடலில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வழங்கினார்.

இந்த நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ. விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மு.கமலக்கண்ணன், மா.காந்தி; 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 77-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.பி.பார்க் சதிஷ், 58-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரோஹித்குமார், 58 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், 61-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நித்திஷ் கிரிதரன், 99 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் குணா, 108-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜோ.சந்தோஷ்குமார், பிரவீன்; 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஸ்ரீதர், தலைமைக் கழகப் பேச்சாளர் சூளை நேரு, முன்னாள் பகுதிப் பிரதிநிதி விஜயகுமார், பாக முகவர் கவிதா, டாக்டர் சந்தோஷ் நகர் அடுக்குமாடிக் குடியிருப்பு நலச் சங்கச் செயலாளர் விஜய தேவராஜ், கோமகன், வழக்கறிஞர் தர்மதுரை, அசினா பேகம், ராஜேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல் வீரர்களும் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் எழும்பூர் தொகுதியில் கேரம், கிரிக்கெட் மற்றும் கால்பந்து போட்டிகள் நடைபெற்றன. இம்மூன்று போட்டிகளில் கலந்துகொண்ட 500 வீரர்களைக் கொண்ட 50 அணிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் இப்போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப் பரிசாக 1 இலட்ச ரூபாய் உள்ளிட்ட பரிசுகளை எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், புளியந்தோப்பு, கே.பி.பார்க் குடியிருப்பு வளாக விளையாட்டுத் திடலில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வழங்கினார்.

## 100 நாள் வேலைத் திட்ட ஒழிப்பு: ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# கரூர் மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!



### மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**நாள் : 24.12.2025 நேரம் : காலை 10.00 மணி**

| வ.எண் | கலந்து கொள்ளும் ஒன்றிய கழகங்கள் | இடம் |
|---|---|---|
| 1. | கரூர் வடக்கு ஒன்றியம்,<br>கரூர் கிழக்கு ஒன்றியம்,<br>கரூர் மேற்கு ஒன்றியம், | கரூர் ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>காதப்பாறை |
| 2. | அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம்,<br>அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியம், | அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>அரவக்குறிச்சி |
| 3. | க.பரமத்தி வடக்கு ஒன்றியம்,<br>க.பரமத்தி தெற்கு ஒன்றியம்,<br>க.பரமத்தி மேற்கு ஒன்றியம், | க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>க.பரமத்தி |
| 4. | தாந்தோணி கிழக்கு ஒன்றியம்,<br>தாந்தோணி மேற்கு ஒன்றியம் | தாந்தோணி ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>தாந்தோணிமலை |
| 5. | கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம்,<br>கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம்,<br>கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம் | கிருஷ்ணராயபுரம் ஊராட்சி<br>ஒன்றிய அலுவலகம்<br>கிருஷ்ணராயபுரம் |
| 6. | கடவூர் வடக்கு ஒன்றியம்,<br>கடவூர் மேற்கு ஒன்றியம்,<br>கடவூர் தெற்கு ஒன்றியம், | கடவூர் ஊராட்சி<br>ஒன்றிய அலுவலகம்<br>தரகம்பட்டி |
| 7. | குளித்தலை கிழக்கு ஒன்றியம்,<br>குளித்தலை மேற்கு ஒன்றியம், | குளித்தலை ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>வைகைநல்லூர் |
| 8. | தோகைமலை மேற்கு ஒன்றியம்,<br>தோகைமலை கிழக்கு ஒன்றியம் | தோகைமலை ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>தோகைமலை |

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் - மாநில நிர்வாகிகள் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.**
செயலாளர்
கரூர் மாவட்ட தி.மு.க.

## கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வருகிற 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வுக்கான (S.I.R) வழக்கறிஞரணியின் செயல்பாடுகள் குறித்து 24.12.2025 (புதன்கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் திருத்தணி நகரத்தில் அமைந்துள்ள திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக அலுவகத்தில் நடைபெறும். ஆலோசனைக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளரும் அரக்கோணம் நாடளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன்., தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன்.,கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.இ.டி.ஆதிசேசன் கழக நெசவாளர் அணி துணைத்தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம் திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், ஆகியோர் கலந்துகொண்டு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி.கே.நாகராஜ், வரவேற்பில், மாவட்ட, வழக்கறிஞரணி தலைவர் வி.எஸ்.சதீஷ், துணைதலைவர் டி.எம்.பவானிமுருகன், துணை அமைப்பாளர்கள் த.தானியேல், ராயல்.ஆர்.பாஸ்கரன், ஜெ.லூகா, என்.குமார் , எல்.அறிவழகன், ஆர். முரளி, ஆகியோர் முன்னிலையில் திருவள்ளூர், திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆகிய நீதிமன்ற வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், CLC,ULC,TLC,TVLC,FLC,BLC, ஆகிய வழக்கறிஞர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.